| | | | |
|---|---|---|---|
| Headline | With eye to end AIDS by 2030, Putrajaya in HIV screening, sex education push | | |
| MediaTitle | Tamil Nesan | | |
| Date | 14 Jul 2016 | Color | Black/white |
| Section | News | Circulation | 35,000 |
| Page No | 3 | Readership | 125,000 |
| Language | Tamil | ArticleSize | 215 cm² |
| Journalist | NULL | AdValue | RM 521 |
| Frequency | Daily | PR Value | RM 1,564 |



# ஆண்டுக்கு 3,000 பேருக்கு எச்.ஐ.வி.

**புத்ராஜெயா, ஜூலை 14-**

வருகின்ற 2030ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய அளவில் எச்.ஐ.வி. நோய் முழுமையாகத் துடைத்தொழிக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய நாட்டு சபை கொள்கை அடிப்படையிலான ஓர் அறிவிப்பைச் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. தற்பொழுது, மலேசியாவில் ஒவ்வோர் ஆண்டும் ஏறக்குறைய 3,300 வரையில் எச்.ஐ.வி சம்பவங்கள் கண்டறியப்பட்டு வருகின்றது என சுகாதார அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் சுப்ரமணியம் கூறியுள்ளார்.

அடுத்து வரக்கூடிய 14 ஆண்டுகளில் எச்.ஐ.வி. சம்பவங்கள் முழுமையாகத் துடைத்தொழிக்கப்பட வேண்டுமென்றால் சில தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய கடப்பாட்டில் அரசாங்கம் உள்ளது.



விபசாரத் தொழில் செய்யும் பெண்கள், போதைப்பொருட்களை ஊசியின் வழியாக இரத்தத்தில் நேரடியாகச் செலுத்துபவர்கள், ஓரினச் சேர்க்கையில் தொடர்புடையவர்கள் போன்றவர்களே இந்த எச்.ஐ.வி. நோய் பரவுவதற்கு முக்கிய காரணகர்த்தாவாக இருக்கின்றனர். இவர்கள் மூலமாகவே இந்நோய் அதிகமாக பரவி வருகின்றது.

எனவே, மேற்குறிப்பிட்ட பிரிவினர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு சுகாதார அம்சங்கள் தொடர்பான விளக்கங்களைக் கொடுப்பதோடு, இந்நோய் பீடிப்பதற்கான சாத்தியங்களையும் வாய்ப்புகளையும் குறைப்பதற்கான பாதுகாப்பு அம்சங்களையும் அதனைப் பின்பற்றக்கூடிய வழிமுறைகளையும் வலியுறுத்தும் பணிகளைப் பல பொது இயக்கங்களின் வழியாக மேற்கொள்வதற்கு அரசாங்கம் பல முயற்சிகளைக் கையாண்டு வருகின்றது. இதில் மலேசிய எச்.ஐ.வி. மன்றமும் முக்கிய பங்காற்றி வருகின்றனர்.

இதன்வழி, நாட்டில் இந்நோய் பரவக்கூடிய வாய்ப்புகளிலிருந்து ஓரளவு குறைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்ந்து குறைக்கப்பட வேண்டுமாயின், இந்நோய் பரவுவதற்குக் காரணமாக இருப்பவர்கள் அவர்களது வாழ்க்கை முறையை மாற்றியமைத்துக் கொள்வதோடு, இந்நோய் பரவுவதற்கான சாத்தியத்தைக் குறைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

அதன் அடிப்படையில், வருகின்ற 2030ஆம் ஆண்டிலிருந்து எச்.ஐ.வி. நோய் முற்றிலும் துடைத்தொழிக்கப்பட்ட சூழலை இந்நாட்டில் உருவாக அனைவரும் அவர்களது பங்கினை ஆற்ற வேண்டும்.

Powered by: isentia